**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 27–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 3–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **கருப்பச்சாமி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**27.11.2025 OS.61/2021 வா.சா.3 கருப்பச்சாமி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:

1) நான் எந்த ஊரில் வசித்து வருகிறேன் என்றால் வாவியரேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். வாதிகள் எனது ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஆதிதிராவிடர் மக்களில் எத்தனை குடும்பங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாவியரேந்தல் கிராமத்தில் ராக்காச்சி அம்மன் கோயில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராக்காச்சி அம்மன் கோயில் திருவிழாவின் போது வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியும்.

2) திருவிழாவின் போது வருவாய் துறையினர் சமாதானக் கூட்டம் நடத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியும். ராக்காச்சி அம்மன் கோவில் உள்ள இடம் வருவாய் துறைக்கு பாத்தியப்பட்ட இடம் என மேற்படி சமாதான கூட்டத்தில் முடிவு எட்டப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் எனது உள்ளூர்காரர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை).**

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2025.11.27 15:22:43 +0530

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam